
॥ आत्मविद्याविलासः ॥



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ச்வேதாரண்யமென்ற திருவெண்காட்டிலிருக்கும், நெரூர் ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மத்தின் குரு ஸ்ரீ பரமசிவேந்த்ர ஸரஸ்வதியின் அதிஷ்டானம். இது ஸ்ரீ காமகோடி பீடம் பராமரிப்பிலிருக்கிறது.



ओं

॥ आत्मविद्याविलासः ॥

ஆத்மவித்யாவிலாஸ:

चिन्मुद्रितकरकमलं चिन्तितभक्तेष्टदं विमलम् ।
गुरुवरमाद्यं कंचन निरवधिकानन्दनिर्भरं वन्दे ॥

சின்முத்ரித கரகமலம் சிந்தித பக்தேஷ்டதம் விமலம் |
குருவரமாத்யம் கம்சன நிரவதிகானந்த நிர்பரம் வந்தே ॥

चिन्मुद्रितकरकमलं சின்முத்திரையோடுள்ள தாமரைக் கையை யுடையவராயும் **चिन्तितभक्तेष्टदं** பக்தர்கள் நினைத்த இஷ்டங்களைக் கொடுப்பவராயும் **निरवधिकानन्दनिर्भरं** எல்லையில்லாத ஆனந்தத்தால் நிரம்பியவராயும் **विमलं** பரிசுத்தராயுமுள்ள **कंचन आद्यं गुरुवरं** (ஒப்பற்ற) ஒரு ஆதி குருச் சிரேஷ்டரை **वन्दे** நமஸ்கரிக்கிறேன்.

I bow down to that first great Teacher who is immaculate, whose lotus hand is in the *chinmudra* pose, who bestows on His devotees all their desires and who is overflowing with endless bliss.

वटतरुनिकटनिवासं पटुतरविज्ञानमुद्रितकराब्जम् ।
कंचन देशिकमाद्यं कैवल्यानन्दकन्दलं वन्दे ॥ १ ॥

1. வடதருநிகடநிவாஸம் படுதர விஜ்ஞான முத்ரிதகராப்ஜம் |
கம்சன தேஸிகமாத்யம் கைவல்யானந்த கந்தலம் வந்தே ॥

वटतरुनिकटनिवासं ஆலமரத்தின் அருகிலே குடியிருப்பவரும் **पटुतरविज्ञानमुद्रितकराब्जं** சிறந்த ஞானத்தை மிகவும் தெளிவாக விளக்கும் முத்திரையோடுள்ள தாமரைக் கையை யுடையவரும் **कैवल्यानन्दकन्दलं** கலப்பற்ற தான (கைவல்யமான) ஆனந்தத்தின் கொழுந்தா யிருப்பவருமான **कंचन आद्यं देशिकं** (ஒப்பற்ற) ஒரு ஆதி குருச் சிரேஷ்டரை **वन्दे** நமஸ்கரிக்கிறேன்.

I bow down to that first great Teacher, who is pure Bliss ever growing, who rests beneath the (*Vata*) banyan tree, and whose lotus-hand has the *mudra* (pose) which expounds most clearly the supreme Wisdom.

निरवधिसंसृतिनीरधिनिपतितजनतारणस्फुरन्नौकाम् ।
परमतभेदनघुटिकां परमशिवेन्द्रार्यपादुकां नौमि ॥ २ ॥

2. நிரவதி ஸம்ஸ்ருதி நீரதி நிபதித ஜனதாரணஸ்புரன் நௌகாம் |
பரமத பேதன குடிகாம் பரமசிவேந்த்ரார்யபாதுகாம்
நௌமி ॥

निरवधिसंसृतिनीरधिनिपतितजनतारणस्फुरन्नौकां எல்லையில்லாத ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் விழுந்த ஜனங்களை கரையிற்கொண்டு சேர்ப்பதற்கு அதிவேகமாகச் செல்லும் படகாகவும் **परमतभेदनघुटिकां** பிற மதங்களை (காலால் எற்றி)ப் பிளந்தெறியும் கணைக்கால் போலவு முள்ள **परमशिवेन्द्रार्यपादुकां** பரம சிவேந்த்ரர்களுடைய பாதுகையை **नौमि** நமஸ்கரிக்கிறேன்.

குறிப்பு: **घुटिकां** என்பது சரியான பாடமாகத் தோன்றவில்லை; **गुटिकां** என்பது பாடமானால், '**परमतभेदनगुटिकां** பிறமதங்களை அழிக்குங் குளிகை போலவு முள்ள' என்று பொருள்கொள்ளவேண்டும்.

I bow down before the sandals of the great Parama Sivendra, which are the boat ever active in rescuing those who have fallen into the limitless ocean of *samsara* and taking them beyond and which are the ankles which knock to pieces alien creeds (other than the true).

देशिकपरमशिवेन्द्रा-देशवशोद्भुद्धदिव्यमहिमाहम् ।
स्वात्मनि विश्रान्तिकृते सरसं प्रस्तौमि किंचिदिदम् ॥ ३ ॥

3. தேஸிகபரம ஸிவேந்த்ரா—தேஸவஸோத்புத்த திவ்ய மஹிமா ஹம் |
ஸ்வாத்மனி விஸ்ராந்தி க்ருதே ஸரஸம் ப்ரஸ்தௌமி கிம்சிதி தம் ॥

देशिकपरमशिवेन्द्रा-देशवशोद्भुद्धदिव्यमहिमा (என்) குரு பரமசிவேந்த்ரர்களுடைய உபதேசபலத்தாலே பிரகாசமடைந்த திவ்விய மஹிமையையுடைய **अहं** நான் **स्वात्मनि विश्रान्तिकृते** ஆத்மாவிலே அமைதியா யிருப்பதற்காக **सरसं** சுவை யுடையதான **इदं किञ्चित् प्रस्तौमि** ஏதோ ஒரு வகையான இதை (ஸ்துதியாக)ச் சொல்லத் தொடங்குகிறேன்.

I now begin to say a few sweet words (of praise), in order that I may rest in my own Self, I whose divine greatness has been awakened perforce by the teaching of my preceptor Paramasivendra.

निरुपमनित्यनिरोहो निष्कलनिर्मायनिर्गुणाकारः ।
विगलितसर्वविकल्पः शुद्धो बुद्धश्चकास्ति परमात्मा ॥ ४ ॥

4. நிருபமநித்யநிரோஹோ நிஷ்கல நிர்மாய நிர்குணாகார : |
விகலித ஸர்வ விகல்பः ஸுத்தோ புத்தஸ்சகாஸ்தி பரமாத்மா ॥

निरुपमनित्यनिरीहः ஒப்பற்றதும் பற்றற்றதுமான நித்தியப் பொருளாய் **निष्कलनिर्मायनिर्गुणाकारः** பகுதிகளாகப் பிரிக்க வொண்ணுததாய் மாயையின் ஸம்பந்தமொன்று மில்லாததாய் குணங்களின் ஸம்பந்தமொன்று மில்லாத வடிவையுடையதுமான **परमात्मा** பரமாத்மா **विगलित-सर्वविकल्पः** எல்லாவித மாறுபாடுகளும் (விகல்பங்களும்) அற்றதாய் **शुद्धः**பரிசுத்தமானதாய் **बुद्धः**விழித்துக்கொண்டிருப்பதாய் (ஞான ஸ்வரூபமாய்) **चकास्ति** விளங்குகின்றது.

The supreme Soul shines pure and awake and devoid of all mutations (Vikalpas); It is unique, eternal and free from passion; It is an indivisible whole, untouched by Māyā (Ignorance) and free from the *gunas* (the three-fold qualities, Sattva, Rajas and Tamas).

स्वाविद्यैकनिबद्धः कुर्वन्कर्माणि मुह्यमानः सन् ।
दैवाद्विधूतबन्धः स्वात्मज्ञानान्मुनिर्जयति ॥ ५ ॥

5. ஸ்வாவித்யைகநிபத்த : குர்வன் கர்மாணி முஹ்யமான: ஸன்
தைவாத் விதூதபந்த : ஸ்வாத்மஜ்ஞானன் முனிர் ஜயதி ॥

स्वाविद्यैकनिबद्धः தன்னுடைய அவித்தையால்மட்டுமே கட்டுண்டவனும் **कर्माणि** காரியங்களை **कुर्वन्** செய்துகொண்டும் **मुह्यमानः** அறிவு மயங்கியும் **सन्** இருந்துகொண்டே **दैवात्** (தற்செயலாக) அதிர்ஷ்டவசத்தால் **स्वात्मज्ञानात्** தன் ஆத்மாவைப் பற்றிய அறிவால் **विधूतबन्धः** பற்றுகள் நீங்கியவனுகிய **मुनिः** முனிவன் **जयति** விளங்குகிறான்.

He who was erstwhile bound merely by his own ignorance and was engaged in (worldly) activities and felt bewildered, he (now) shines supreme as a sage having,

by God's grace, shaken off his shackles because of the knowledge of the Atman (his own Self).

मायावशेन सुप्तो मध्ये पश्यन्सहस्रशः स्वप्नान् ।
देशिकवचःप्रबुद्धो दीव्यत्यानन्दवारिधौ कोऽपि ॥ ६ ॥

6. மாயாவஶேன ஸுப்தோ மத்யே பஶ்யன் ஸஹஸ்ரஶ : ஸ்வப்னான் |
தேஶிகவச : ப்ரபுத்தோ தீவ்யத்யானந்த வாரிதௌ கோ'பி ॥

मायावशेन மாயையின் சக்தியால் **सुप्तः** தூங்குகிறவனாகி **मध्ये** (தூக்கத்தின்) இடையிலே **स्वप्नान्** கனாக்களை **सहस्रशः** ஆயிரக்கணக்காக **पश्यन्** கண்டு, (பின்பு) **देशिकवचःप्रबुद्धः** குருவினுடைய வார்த்தைகளால் விழித்துக் கொண்டவனாகி **आनन्दवारिधौ** ஆனந்த ஸாகரத்தில் **कः अपि** (ஒப்பற்ற) ஒருவன் **दीव्यति** திளைத்து இன்புறுகிறான்.

He who (erstwhile) was sleeping under the influence of Māyā (Illusion) and during his sleep had dreams by thousands, he is now awakened by the words of his (preceptor) *Guru* and delights in the ocean of Bliss.

प्राक्तभावमपास्य स्वीकृतनिजरूपसच्चिदानन्दः ।
गुरुवरकरुणापाङ्गा–द्गौरवमासाद्य माद्यति प्राज्ञः ॥ ७ ॥

7. ப்ராக்ருத பாவமபாஸ்ய ஸ்வீக்ருத நிஜரூப ஸச்சிதானந்த : |
குருவர கருணாபாங்காத்—கௌரவமாஸாத்ய மாத்யதி ப்ராஜ்ஞ : ॥

गुरुवरकरुणापाङ्गात् சிறந்த குருமூர்த்திகளின் கருணை கொண்ட கடைக்கண் பார்வையால் **प्राकृतभावं** பிரக்ருதி ஸம்பந்தமான தன்மையை **अपास्य** உதறியெறிந்து **स्वीकृत-निजस्वरूपसच्चिदानन्दः** (தன் ஸ்வரூபமான) உண்மை

இயல்பான ஸச்சிதானந்தத்தை தன்னதாக்கிக் கொண்ட வனுகி **गौरवं** மேன்மையை **आसाद्य** அடைந்து **प्राज्ञः** அறி வாளி **माद्यति** களிப்புறுகிறான்.

The wise man rejoices having, attained to dignity by a mere side-glance from the great (guru's) teacher's gracious eyes, having cast off his natural propensities (born of Prakrti) and having made his real nature as *Sat*, *Chit* and *Ananda* his own.

श्रीगुरुकृपया सच्चित्सुखनिजरूपे निमग्नधीर्मौनी ।
विहरति कश्चन विबुधः शान्ताहंतो नितान्तमुदितान्तः ॥ ८ ॥

8. ஸ்ரீ குருகிருபயா ஸச்சித்ஸுகநிஜரூபே நிமக்னதீர்மௌனீ
விஹரதி கஸ்சன விபுதः ஸாந்தாஹந்தோ நிதாந்தமுதிதாந்தः ॥

कश्चन विबुधः (ஒப்பற்ற) ஒரு ஞானி **श्रीगुरुकृपया** ஸ்ரீ குருவின் கிருபையால் **सच्चित्सुखनिजरूपे** ஸத்தும் சித்தும் ஆனந்தமுமான தன் ஸ்வரூபத்திலே **निमग्नधीः** ஆழ்ந்த புத்தியையுடைய **मौनी** மௌனியாகி **शान्ताहन्तः** அகம் பாவமற்றவனுய் **नितान्तमुदितान्तः** மிகவும் களிப்புற்ற மனதை யுடையவனுய் **विहरति** விளையாடுகிறான்.

By the grace of his good teacher (*Guru*), the wise man rejoices silently and much pleased at heart, and with his mind submerged in his own nature as Existence, Knowledge and Bliss.

गुरुवरकरुणालहरी-व्यतिकरभरशीतलस्वान्तः ।
रमते यतिवर एको निरुपमसुखसीमनि स्वैरम् ॥ ९ ॥

9. குருவரகருணலஹரீ-வ்யதிகரபரஶீதலஸ்வாந்தः |
ரமதே யதிவர ஏகோ நிருபமஸுகஸீமனி ஸ்வைரம் ॥

एकः यतिवरः ஒப்பற்ற சிறந்த சன்னியாசி **गुरुवरकरुणा-लहरीव्यतिकरभरशीतलस्वान्तः** சிறந்த குருவின் கருணை யாகிய பேரலைக்கு அருகேயிருப்பதால் அதிகக் குளிர்ச்சி பெற்ற மனதையுடையவனுய் **स्वैरं** தன்னிச்சைப்படி **निरुपमसुखसीमनि** ஒப்பற்ற ஆனந்தத்தின் (எல்லைப் புறத்திலே) பெருக்கிலே **रमते** இன்புறுகிறுன்.

The good Sannyasin is unique, rejoicing at will in the utmost regions of incomparable Bliss, with his heart's passions completely cooled by its nearness to the surging waves of grace flowing from his good teacher (*guru*).

श्रीदेशिकवरकरुणा-रविकरसमपोहितान्तरध्वान्तः ।
विहरन्मस्करिवर्यो निरवधिकानन्दनीरधावास्ते ॥ १० ॥

10. ஸ்ரீதேஶிக வரகருணை - ரவிகர ஸமபோஹிதாந்தரத்வாந்தः |
விஹரன் மஸ்கரிவர்யோ நிரவதிகானந்த நீரதாவாஸ்தே ॥

श्रीदेशिकवरकरुणारविकरसमपोहितान्तरध्वान्तः ஸ்ரீ குரு சிரேஷ்டரின் கருணையாகிய சூரிய கிரணங்களால் (அக இருளை) அஞ்ஞானத்தைப் போக்கிக் கொண்டவரான **मस्करवर्यः** சிறந்த சன்னியாசி **निरवधिकानन्दनीरधौ** எல்லை யற்றதான ஆனந்த ஸாகரத்திலே **विहरन्** விளையாடிக்கொண்டு **आस्ते** இருக்கிறுன்.

The good (ascetic) Sannyasin, from whose heart darkness has been dispelled by the sun-like radiance of his good Guru's grace, is sporting in the boundless ocean of Bliss.

जनिविपरीतक्रमतो बुद्ध्या प्रविलाप्य पञ्चभूतानि ।
परिशिष्टमात्मतत्त्वं पश्यन्नास्ते मुनिः शान्तः ॥ ११ ॥

11. ஜனிவிபரீத க்ரமதோ புத்த்யா ப்ரவிலாப்ய பஞ்சபூதானி |
பரிஶிஷ்ட மாத்மதத்த்வம் பஶ்யன்னாஸ்தே முனிः ஶாந்தः ॥

पञ्चभूतानि ஐந்து பூதங்களையும் **जनिविपरीतक्रमतः** (அவை) தோன்றிய முறைக்கு மாறான முறையிலே (அதாவது, ஆகாசம், வாயு, தேஜஸ், நீர் மண் என்றதற்கு மாறான மண், நீர், தேஜஸ், வாயு, ஆகாசம் என்ற முறையிலே) **बुद्ध्या** புத்தியைக்கொண்டு **प्रविलाप्य** ஒடுங்கச் செய்து **परिशिष्टं** எஞ்சியதான **आत्मतत्त्वं** ஆத்மப்பொருளை **पश्यन्** நோக்கியவனும் **मुनिः** ஒரு முனிவன் **शान्तः** சாந்த முடையவனாக **आस्ते** இருக்கிறான்.

The sage rests quiet, visualizing the Atman that remains, after he has by his Buddhi (mental faculty) uncreated (by involution) the five elements inverting the order of their creation (evolution).

जगदखिलमिदमसारं मायिकमेवेति मनसि मन्वानः ।
पर्यटति पाटिताशः प्रगलितमदमानमत्सरः कोऽपि ॥ १२ ॥

12. ஜகதகில மிதமஸாரம் மாயிகமேவேதி மனஸி மன்வானः |
பர்யடதி பாடிதாஶः ப்ரகலித மதமான மத்ஸரः கோ'பி ॥

इदं अखिलं जगत् இந்த ஜகத் முழுவதும் **असारं** ஸாரமற்றது **मायिकं एव** மாயையால் ஆனதே யாகும் **इति** என்று **मनसि** மனதிலே **मन्वानः** கருதுவோனாகி **पाटिताशः** ஆசை நொறுங்கிப் பொடிந்துபோனதால் ஆசையற்றவனும் **प्रगलितमदमानमत्सरः** செருக்கு, அபிமானம், பொறாமை இவை தன்னிடத்திலிருந்து வழுவப்பெற்றவனுமாகி **कः अपि** ஒப்பற்ற ஒருவன் **पर्यटति** திரிகிறான்.

He wanders about, with his desires crushed and with his pride self-esteem and envy all gone, realizing in his mind that this universe in its entirety is unsubstantial and proceeds from Māyā (Illusion).

नात्मनि किंचिन्माया तत्कार्यं वास्ति वस्तुतो विमले ।
इति निश्चयवानन्त-र्हृष्यत्यानन्दनिर्भरो योगी ॥ १३ ॥

13. நாத்மனி கிம்சின் மாயா தத்கார்யம் வாஸ்தி வஸ்துதோ விமலே |
இதி நிஸ்சயவானந்த-ர்ஹ்ருஷ்ய த்யானந்த நிர்பரோ யோகீ ॥

विमले आत्मनि பரிசுத்தமான ஆத்மாவாகிய தன்னிடத்திலே **माया** மாயையேனும் **वा** அல்லது **तत्कार्यं** மாயையின் காரியமேனும் **किंचित्** கொஞ்சமும் **वस्तुतः** உண்மையில் **न अस्ति** இல்லை **इति** என்று **निश्चयवान्** உறுதி கொண்டவனும் **आनन्दनिर्भरः** ஆனந்தம் நிரம்பியவனும் **योगी** யோகியானவன் **अन्तः हृष्यति** உள்ளத்திற் களிப்புறுகிறான்.

The Yogin, being full of Bliss, rejoices at heart, knowing for certain that in the immaculate Self there is really no Māyā (Illusion) nor any the least consequence of Her touch.

त्वमहमभिमानहीनो मोदितनानाजनाचारः ।
विहरति बालवदेको विमलसुखाम्भोनिधौ मग्नः ॥ १४ ॥

14. த்வமஹமபிமானஹீனே மோதித நாநாஜனசாரः |
விஹரதி பாலவதேகோ விமலஸுகாம்போநிதௌ மக்னः ॥

त्वमहमभिमानहीनः நீ நான் என்னும் அபிமானமில்லாதவனும் **मोदितनानाजनाचारः** ஜனங்களின் பல வேறு நடத்தைகளிலும் இன்புறுவோனும் **विमलसुखाम्भोनिधौ** பரிசுத்தமான ஆனந்த ஸாகரத்திலே **मग्नः** மூழ்கியவனும் **बालवत्** சிறு பிள்ளையைப்போல **एकः** ஒருவன் **विहरति** விளையாடுகிறான்.

He sports like a child, plunged in the Ocean of pure Bliss and delighted with the diverse actions of men, without any feeling of 'you' or 'I'.

अवधूतकर्मजालो जडबधिरान्धोपमः कोऽपि ।
आत्मारामो यतिरा-डटवीकोणेष्वटन्नास्ते ॥ १५ ॥

15. அவதூதகர்மஜாலோ ஜடபதிராந்தோபமः கோ'பி |
ஆத்மாராமோ யதிரா—டடவீகோணேஷ்வடன்னாஸ்தே ॥

आत्मारामः (தன்னிலேயே) ஆத்மாவிலேயே இன்புறுவோனுகிய **कः अपि यतिराट्** ஒரு (ஒப்பற்ற) சன்னியாசிச் சிரேஷ்டன் **अवधूतकर्मजालः** கர்மாக்களாகிய வலைகளினின்றும் (பந்தங்களினின்றும்) நீங்கியவனுய் **जडबधिरान्धोपमः** அறிவீனனும் செவிடனும் குருடனுமான ஒருவனைப் போன்றவனுய் **अटवीकोणेषु** காட்டு மூலைகளிலே **अटन् आस्ते** திரிந்துகொண்டிருக்கிறன்.

Delighted in the Atman (in his Self) and rid of the bondage of *karma* (action), the Prince of Sannyasins is wandering about in the outskirts of the jungle, like a deaf blind idiot.

शान्त्या दृढोपगूढः शान्तसमस्तान्यवेदनोदारः ।
रमते रसज्ञ एको रम्ये स्वानन्दपर्यङ्के ॥ १६ ॥

16. ஶாந்த்யா த்ருடோபகூடः ஶாந்தஸமஸ்தான்ய வேதனோதாரः|
ரமதே ரஸஜ்ஞ ஏகோ ரம்யே ஸ்வானந்த பர்யங்கே ॥

रम्ये இன்பமளிப்பதான **स्वानन्दपर्यङ्के** தன்னுடையதான ஆனந்தமயமான பள்ளியிலே **शान्तसमस्तान्यवेदनोदारः** மற்ற எல்லா வுணர்ச்சிகளும் அற்றுத் தெளிந்தவனுன **एकः** ஒப்பற்ற வொரு **रसज्ञः** ரஸஜ்ஞன் (இன்பச் சுவை

யறிந்தவன்) **शान्त्या** மனச் சாந்தியாலே **दृढोपगूढः** இறுகத் தழுவப்பெற்றவனுய் **रमते** இன்புறுகிறுன்.

Alone the happy one enjoys, remaining in the close embrace of Santi (Equanimity) on the bed of his own Ananda (Bliss), serene and unruffled by all other sensations.

उन्मूलितविषयारिः स्वीकृतवैराग्यसर्वस्वः ।
स्वात्मानन्दमहिम्नि स्वाराज्येऽस्मिन् विराजते यतिराट् ॥ १७ ॥

17. உன்மூலித விஷயாரி: ஸ்வீக்ருத வைராக்ய ஸர்வஸ்வ : |
ஸ்வாத்மானந்த மஹிம்னி ஸ்வாராஜ்யே'ஸ்மின் விராஜதே
யதிராட் ॥

यतिराट् சன்னியாசிகளுக்கு மன்னன் (சிறந்த சன்னியாசி) **उन्मूलितविषयारिः** இந்திரிய சுகங்களாகிய பகைவர்களே வேரோடு களைந்தவனுய் **स्वीकृतवैराग्यसर्वस्वः** வைராக்கியமென்னும் சொத்தையெல்லாம் தன்னதாக்கிக் கொண்டவனுய் **स्वात्मानन्दमहिम्नि** தன் ஆத்மாவாகிய ஆனந்தத்தின் பெருமையென்னும் **अस्मिन् स्वाराज्ये** இந்த ஸ்வராஜ்யத்தில் **विराजते** சிறப்புற்று விளங்குகிறுன்.

'விஷயம்' என்பது இந்திரிய உணர்ச்சியையும் தேசத்தையும் குறிக்கும். அரசன் நாட்டிலுள்ள பகைவரை வென்று வேற்றரசர்களின் சொத்துக்களையெல்லாம் தன்னுடையதாக்கிக் கொண்டு ராஜ்யாதிகாரத்திற் பெருமையுடன் விளங்குவதுபோல யதிசிரேஷ்டனும் விளங்குகிறுன் என்பது கருத்து.

The king of ascetics shines supreme in his own kingdom, in the majesty of his own blissful Self (Atman), having made all the wealth of non-attachment his own and having uprooted his enemies, the sense-pleasures.

सवितर्यपि शीतरुचौ चन्द्रे तीक्ष्णेऽप्यधो वहत्यग्नौ ।
मायिकमिदमिति जानन् जीवन्मुक्तो न विस्मयी भवति ॥ १८ ॥

18. ஸவிதர்யபி ஶீதருசௌ சந்த்ரே தீக்ஷ்ணே' ப்யதோ
வஹத்யக்னௌ |
மாயிக மிதமிதி ஜானன் ஜீவன்முக்தோ ந விஸ்மயீ பவதி ॥

सवितरि சூரியன் **शीतरुचौ अपि** குளிர்ந்த கிரணங்களை யுடையவனாயினும் **चन्द्रे** சந்திரன் **तीक्ष्णे अपि** கொடியவனாயினும் **अग्नौ** தீ **अधः वहति** கீழ்நோக்கி கொழுந்துவிட்டெறிந்தாலும் **इदं** இது **मायिकं** மாயையால் ஆனது **इति** என்று **जानन्** அறிந்தவனாகி **जीवन्मुक्तः** ஜீவன்முக்தன் (உயிரோடுள்ளபோதே மோக்ஷத்தை யடைந்தவன்) **विस्मयी** ஆச்சரியங் கொண்டவனாக **न भवति** இருப்பதில்லை.

Though the sun be cool, though the moon scorch and the tongue of fire leap downward, the Jivanmukta knows it to be the work of Māyā (Illusion) and does not wonder thereat.

अज्ञानवैरिविजयी प्रज्ञामातङ्गमस्तकारूढः ।
विहरति संयमिराजः समरसमुखधाम्नि सर्वतो रम्ये ॥ १९ ॥

19. அஜ்ஞான வைரிவிஜயீ ப்ரஜ்ஞா மாதங்க மஸ்தகாரூடः |
விஹரதி ஸம்யமிராஜ : ஸமரஸ ஸுகதாம்னி ஸர்வதோ
ரம்யே ॥

प्रज्ञामातङ्गमस्तकारूढः பேரறிவு (ப்ரஜ்ஞை) என்னும் யானையின் பிடரிலேறிக்கொண்டு **अज्ञानवैरिविजयी** அறியாமையாகிய பகைவனை வென்றவனான **संयमिराजः** துறவி ராஜன் **सर्वतः** எல்லா வகைகளிலும் **रम्ये** இன்பந் தருவதான **समरसमुखधाम्नि** (ஸமரஸம்) யாதொரு பேதமுமில்லாத இன்பமான பிரதேசத்திலே **विहरति** இன்புறுகிறான்.

The King of ascetics sports in the expanse of unvarying Bliss, which is ever most pleasing, riding on the high neck of the elephant of Right Knowledge and vanquishing his enemy, Ignorance.

शान्ताहंकृतिदोषः सुसमाहितमानसः कोऽपि ।
पूर्णेन्दुशिशिरभावो राजत्यानन्दसत्यचिद्रसिकः ॥ २० ॥

20. ஶாந்தாஹம்க்ருதிதோஷ: ஸுஸமாஹித மானஸ : கோ'பி |
பூர்ணேந்து ஶிஶிரபாவோ ராஜத்யானந்த ஸத்யசித்ரஸிக: ॥

शान्ताहंकृतिदोषः அஹங்காரமென்னும் தோஷம் அற்றவனையும் **सुसमाहितमानसः** நன்கு அமைந்த மன முடையவனையும் **पूर्णेन्दुशिशिरभावः** முழுமதிபோன்று குளிர்ந்த எண்ணங்களை யுடையவனையும் **कः आनन्दसत्यचिद्रसिकः अपि** ஸச்சிதானந்தப் பொருளாகி இன்புறும் ஒப்பற்ற ஒருவன் **राजति** விளங்குகிறான்.

He shines supreme, enjoying as Existence-Knowledge-Bliss, with the blemish of egoism gone, with his mind quite calm and composed, and with his thoughts cool and pleasant like the full moon.

तिष्ठन्परत्र धाम्नि स्वीयसुखास्वादपरवशः कश्चित् ।
क्वापि ध्यायति कुहचि-द्गायति कुत्रापि नृत्यति स्वैरम् ॥ २१ ॥

21. திஷ்டன் பரத்ர தாம்னி ஸ்வீய ஸுகாஸ்வாத பரவஶ :
கஶ்சித் |
க்வாபி த்யாயதி குஹசித்-காயதி குத்ராபி ந்ருத்யதி
ஸ்வைரம் ॥

परत्र வேற்றுலகிலே **धाम्नि** ஓரிடத்திலே **तिष्ठन्** இருந்து கொண்டு **स्वीयसुखास्वादपरवशः** தன்னுடையதான (ஆத்

மாவின்) ஆனந்தத்தை நுகர்வதிலே ஈடுபட்டவனுய் **कश्चित्** (ஒப்பற்ற) ஒருவன் **स्वैरं** தன்னிச்சைப்படி **क अपि** எங்கேனும் **ध्यायति** மனஞ் செலுத்துகிறுன், **कुहचित्** எங்கேனும் **गायति** பாடுகிறுன், **कुत्र अपि** எங்கேனும் **नृत्यति** ஆடுகிறுன்.

Fully engrossed in the enjoyment of his own Bliss, he remains in another world as it were; and, as it strikes his fancy, here he is engaged in thought, and there he is singing, and there he is dancing.

अगृहीताघकलङ्कः प्रशमितसङ्कल्पविभ्रमः प्राज्ञः ।
न्यक्कृतकार्यकलाप-स्तिष्ठत्यापूर्णसीमनि कापि ॥ २२ ॥

22. *அக்ருஹீதாக கலங்க : ப்ரஶமித ஸங்கல்ப விப்ரம :*
ப்ராஜ்ஞ : |
ந்யக்க்ருத கார்யகலாப-ஸ்திஷ்டத்யாபூர்ண ஸீமனி க்வாபி ॥

अगृहीताघकलङ्कः பாபமென்னும் மறுவை (களங்கத்தை)க் கொள்ளாதவனுய் **प्रशमितसङ्कल्पविभ्रमः** (ஸங்கல்பங்களால்) எண்ணங்களால் உண்டாகும் குழப்பங்கள் முற்றும் அற்றவனுய் **न्यक्कृतकार्यकलापः** காரியத் தொகுதிகளே யெல்லாம் அவமதித்து விலக்கியவனுயுள்ள **प्राज्ञः** பேரறிவாளி **क अपि** எங்கேயோ **आपूर्णसीमनि** எங்கும் நிறைந்த செல்வத்தில் (ஒரு இடத்தில்) **तिष्ठति** நிலைபெற்றிருக்கிறுன்.

Wherever he be, he stands secure in the region of Perfection, the wise man who is unblemished by sin, who has ceased to be distracted by thoughts (Sankalpas) and who has risen superior to ordained action.

चपलं मनःकुरङ्गं चारु गृहीत्वा विमर्शवागुरया ।
निगमारण्यविहारश्रान्तः शेते स्वधाम्नि कोऽप्येकः ॥ २३ ॥

23. சபலம் மனः குரங்கம் சாரு க்ருஹீத்வா விமர்ஶவாகுரயா |
நிகமாரண்ய விஹார—ஶ்ராந்த : ஶேதே ஸ்வதாம்னி
கோ'ப்யேக : |

चपलं ஒரு நிலையிலே நில்லாது திரிகின்ற **मनः कुरङ्गं** மனமென்னும் மானை **विमर्शवागुरया** (விமர்சம்) ஆராய்ச்சி என்னும் வலையிலே **चारु** அழகாக **गृहीत्वा** பிடித்தபின்பு **निगमारण्यविहारश्रान्तः** வேதங்களென்னும் காடுகளிலே இன்பமாகத் திரிந்ததாலே களைப்புற்றவனை **कः एकः अपि** ஒப்பற்ற ஒருவன் **स्वधाम्नि** தன்னுடைய இடத்திலேயே **शेते** தூங்குகிறான்.

Having skilfully caught the fickle antelope of his mind (Manas) in the net of Discernment (Vimarsana), he, the unique one, reposes in the Self (in his own place), tired with hunting in the forests of the Vedas.

दारुणचित्तव्याघ्रं धीरमनःखड्गधारया हत्वा ।
अभयारण्ये कोऽपि स्वैरविहारी जयत्येकः ॥ २४ ॥

24. தாருண சித்த வ்யாக்ரம் தீரமன : கட்கதாரயா ஹத்வா |
அபயாரண்யே கோ'பி ஸ்வைரவிஹாரீ ஜயத்யேக : ॥

दारुणचित्तव्याघ्रं சித்தமென்னும் கொடும் புலியை **धीरमनःखड्गधारया** தைர்யங்கொண்ட மனம் என்னும் வாளின் முனையால் **हत्वा** வெட்டி யழித்து **कः अपि एकः** ஒப்பற்றவனை ஒருவன் **अभयारण्ये** அச்சமின்மை என்னும் காட்டிலே **स्वैरविहारी** தன்னிஷ்டப்படி திரிந்து விளையாடிக்கொண்டு **जयति** சிறந்து விளங்குகிறான்.

Unique he triumphs, wandering at will in the forest of Fearlessness, having felled the cruel tiger called *Chitta* (Mentality) with the sharp-edged sword of his brave Mind (Manas.)

सज्जनहृदयसरोजो-न्मीलनकरधीकरप्रसरः ।
एको यतिवरपूषा निर्दोषश्चरति चिद्गगने ॥ २५ ॥

25. ஸஜ்ஜன ஹ்ருதய ஸரோஜோ—ன்மீலனகர தீகர ப்ரஸர : ।
ஏகோ யதிவர பூஷா நிர்தோஷஸ்சரதி சித்தகனே ॥

सज्जनहृदयसरोजोन्मीलनकरधीकरप्रसरः நல்லோர்களின் இருதயங்கள் என்னும் தாமரைகளை மலரச்செய்யும் புத்திக் கதிர்களைப் பரப்புகிறவனும் **निर्दोषः** குற்றமற்றவனும் **चिद्गगने** 'சித்' என்னும் வானத்திலே **यतिवरपूषा** துறவிகளுட் சிறந்தவனான சூரியன் **एकः** தனித்து **चरति** சஞ்சரிக்கிறான்.

The spotless Sun of a supreme ascetic stalks unique in the sky of *Chit* (Knowledge), with his abundant thoughts as the rays causing the lotuses of good men's hearts to bloom.

कुवलयविकासकारणमज्ञानध्वान्तकौमुदीप्रज्ञः ।
शुद्धो मुनीन्द्रचन्द्रः सुरसेव्ये लसति विष्णुपदे ॥ २६ ॥

26. குவலயவிகாஸகாரண—மஜ்ஞான த்வாந்த கௌமுதீப்ரஜ்ஞ: |
ஸுத்தோ முனீந்த்ர சந்த்ர : ஸுரஸேவ்யே லஸதி விஷ்ணு பதே ॥

कुवलयविकासकारणं குவளைகள் மலர்வதற்குக் காரணமாயும் (பூமண்டலம் முழுதும் மகிழ்வதற்குக் காரணமாயும்) **अज्ञानध्वान्तकौमुदीप्रज्ञः** அறியாமை என்னும் இருளைப் போக்கும் பேரறிவாகிய நிலவை யுடையதாயும் **शुद्धः**

(மேலும்) களங்கமற்றுத் தூயதாயுமுள்ள **मुनीन्द्रचन्द्रः** முனிச் சிரேஷ்டனாகிய சந்திரன் **सुरसेव्ये** தேவர்கள் அடைவதற்கேற்றதான **विष्णुपदे** (எங்கும் நிறைந்ததாக நாடப் பெறும் பரம்பொருளிலே) வானத்திலே **लसति** விளங்குகிறான்.

The great sage (Muni) shines in the ethereal region of Chit (Vishnupada). fit abode of the Gods, a spotless moon which causes the blue lilies to bloom and the moonlight of whose wisdom dispels Ignorance.

स्वानन्दामृतसेकै-रान्तरसंतापसंततिं शमयन् ।
चित्रमचञ्चलवृत्ति-श्चिद्व्योमनि भाति योगिवर्यघनः ॥ २७ ॥

27. ஸ்வானந்தாம்ருதஸேகை—ராந்தர ஸம்தாப ஸம்ததிம்
ஶமயன் ।
சித்ரமசஞ்சல வ்ருத்தி—ஶ்சித்வ்யோமனி பாதி யோகி
வர்யகன : ॥

स्वानन्दामृतसेकै : தன்னுடைய ஆனந்தமயமான (அமுதத் திவலைகளால்) நீர்த்துளிகளால் **आन्तरसंतापसंततिं** இருதயத்திலே தொடர்ச்சியாக எழுகின்ற ஸந்தாபங்களை (மன எரிச்சல்களை) **शमयन्** தணிவித்துக்கொண்டு **चिद्व्योमनि** 'சித்' என்னும் வானத்திலே (சிதாகாசத்திலே) **योगिवर्यघनः** யோகிகளுட் சிறந்தவன் என்னும் மேகமானது **अचञ्चलवृत्तिः** அலையாமல் நிலைத்து நிற்பதாய் **भाति** விளங்குகிறது, **चित्रं** ஆச்சர்யம் !

O Wonder! The great Yogin shines in the ethereal region of Chit, an unmoving cloud which, by raining the elixir of its own bliss (of Ātman), quenches the spreading fire of inward distress.

सुमनःसौरभमञ्जुल-संचारनिवारिताखिलश्रान्तिः ।
संयमिचारुसमीरो विहरत्यानन्दसंविदारामे ॥ २८ ॥

28. ஸுமன : ஸௌரபமஞ்ஜுல—ஸம்சார நிவாரிதாகிலஸ்ரான்தி : |
ஸம்யமிசாரு ஸமீரோ விஹரத்யானந்த ஸம்விதாராமே ॥

संयमिचारुसमीरः துறவி என்னும் மென்காற்று **सुमनः-सौरभमञ्जुलसंचारनिवारिताखिलश्रान्तिः** மலர்களின் (பிரும்ம நிஷ்டர்களின்) தெய்விக நறுமணங்கொண்டு சுகமாக வீசுவதாலே (எல்லோருடைய) எல்லாச் சிரமங்களையும் நீக்கிக்கொண்டு **आनन्दसंविदारामे** ஆனந்தமயமான ஸம் வித்ஞான மென்னும் பூந்தோட்டத்திலே **विहरति** இன்புற்று உலாவுகிறது.

The recluse is the gentle wind which blows pleasantly in the grove of Knowledge-Bliss and prevents all fatigue by its lovely progress, along with the fragrance of flowers (realised souls).

निःश्रेयससरसफले निर्मलविज्ञानपल्लवमनोज्ञे ।
वीतभये विपिनतले यतिशितिकण्ठो विभाति कोऽप्येकः ॥ २९ ॥

29. நி : ஸ்ரேயஸரஸபலே நிர்மலவிஜ்ஞான பல்லவ மனோ ஜ்ஞே |
வீதபயே விபினதலே யதிஸிதிகண்டோ விபாதி கோ'ப்யேக: ॥

निः श्रेयससरसफले ரஸம் (அமிர்தம்) நிறைந்ததான மோக்ஷம் (நிஸ்ரேயஸ்) என்னும் பழத்தை யுடையதாயும் **निर्मलविज्ञानपल्लवमनोज्ञे** விஞ்ஞானம் (பேரறிவு) என்னும் தூய தளிர்களால் மனதைக் கவர்வதாயும் **वीतभये** பயம் முற்றும் நீங்கியதாயுமுள்ள **विपिनतले** காட்டுப்பிர

தேசத்தில் **कः अपि यतिशिखिकण्ठः एकः** ஒப்பற்ற துறவியாகிய மயில் ஒன்று **विभाति** விளங்குகின்றது.

The ascetic shines, a peacock in the region of the forest, whence fear has fled and where grow the luscious fruit of Beatitude (Nisreyasa) and the pleasing flowers of perfect Knowledge.

निःसारभुवनमरुतल-मुत्सार्यानन्दसाररसपूर्णे ।
वरसरसि चिन्मयेऽस्मिन् परहंसः कोऽपि दीव्यति स्वैरम् ॥ ३० ॥

30. *நி : ஸாரபுவனமருதல—முத்ஸார்யானந்த ஸாரரஸ பூர்ணே |*
வரஸரஸி சின்மயே'ஸ்மின் பரஹம்ஸ : கோ' பி தீவ்யதி
ஸ்வைரம் ॥

निः सारभुवनमरुतलं ஸாரமற்றதான பூமியாகிய பாலை நிலத்தை **उत्सार्य** விட்டகன்று **आनन्दसाररसपूर्णे** ஆனந்த மயமான (அமுதத்தால்) நீரால் நிறைந்ததும் **चिन्मये** 'சித்' ஆகியதுமான **अस्मिन् वरसरसि** இந்த சிறந்த ஏரியிலே **कः अपि** ஒப்பற்ற ஒரு **परहंसः** சிறந்த ஹம்ஸமான து **स्वैरं** தன்னிச்சைப்படி **दीव्यति** விளையாடுகின்றது.

Abandoning the desert region of this worthless world, he the good swan sports freely in this excellent lake which is all Chit (knowledge) and full of the sweet waters of perfect Bliss.

निखिलागमपल्लविते निगमशिरस्तन्त्रशीतलोद्याने ।
मधुरतरमञ्जुवाचः कूजन्नास्ते यतीन्द्रकलकण्ठः ॥ ३१ ॥

31. *நிகிலாகம பல்லவிதே நிகமஶிரஸ்தந்த்ர ஶீதலோத்யானே |*
மதுரதரமஞ்ஜுவாச : கூஜன்னஸ்தே யதீந்த்ரகலகண்ட : ॥

निखिलागमपल्लविते எல்லா வேதங்களும் துளிர்த்திருக்கின்ற **निगमशिरस्तन्त्रशीतलोद्याने** உபநிஷத்துக்களிலுள்ள உபாஸனைகளால் (தந்திரங்களால்) குளிர்ந்திருக்

கும் பூஞ்சோலையிலே **यतीन्द्रकलकण्ठः** சன்னியாசிச் சிரேஷ்டனை குயிலானது **मधुरतरमञ्जुवाचः** மிக்க இனிமையான அஞ்சொற்களை **कूजन्** மிழற்றிக் (கூவிக்)கொண்டு **आस्ते** இருக்கின்றது.

The great recluse is the cuckoo which cooes soft sweet words in the grove which is made cool by the secret lore (Tantras) of the Upanishads and where all the Vedas are in bloom.

दारितमोहमदेभो दूरीकृतसकलदुरितशार्दूलः ।
विबुधोत्तमसिंहवरो विहरत्यानन्दविततकान्तारे ॥ ३२ ॥

32. தாரிதமோஹமதேபோ தூரீக்ருதஸகலதுரித ஸார்தூல : |
விபுதோத்தமஸிம்ஹவரோ விஹரத்யானந்த விததகாந்தாரே ॥

दारितमोहमदेभः அஞ்ஞானம் என்னும் மதம்பிடித்த யானையைப் பிளந்தெறிந்து **दूरीकृतसकलदुरितशार्दूलः** பாபங்கள் என்னும் புலிகளை யெல்லாம் வெருட்டியோட்டிய **विबुधोत्तमसिंहवरः** புத்திமான்களுட் சிறந்தவனை சீரிய சிங்கமானது **आनन्दविततकान्तारे** ஆனந்தம் என்னும் அகன்ற காட்டிலே **विहरति** இன்புற்று விளையாடுகின்றது.

The excellent man of wisdom is the great lion which sports in the wide forest of Bliss, having torn asunder the wild elephant Delusion (*Moha*) and driven away all the tigers which are sins.

अज्ञानमृगवरोज्झित-विज्ञानोत्तुङ्गशृङ्गशिखरितले ।
मतिसल्लिलशीतलाङ्गो यतिमदकलभो विराजते विहरन् ॥ ३३ ॥

33. அஜ்ஞான்ம்ருகவரோஜ்ஜித— விஜ்ஞானோத்துங்கஸ்ருங்கஸிக ரிதலே |
மதிஸலிலஸீதலாங்கோ யதிமதகலபோ விராஜதே விஹரன் ॥

अज्ञानमृगवरोज्झित - **विज्ञानोत्तुङ्गशृङ्गशिखरितले** அறியாமை (அஞ்ஞானம்) என்னும் சிங்கத்தாலும் ஏறமுடியாதென்று விடுக்கப்பெற்ற பேரறிவு (விஞ்ஞானம்) என்னும் உயர்ந்த கொடுமுடியின் உச்சிப்பாகத்திலே **मतिसलिलशीतलाङ्गः** மனனம் என்னும் நீராலே குளிர்ந்த வுடலையுடைய **यतिमदकलभः** துறவி என்னும் மதயானை **विहरन्** விளையாடிக்கொண்டு **विराजते** விளங்குகிறது.

The ascetic is a wild young elephant who, cool and wet with meditation, sports in the high regions of the lofty peak of supreme Knowledge, beyond the reach of the lion, Ignorance.

नासाञ्चलनिहिताक्षो नामादिभ्योः निवर्तितस्वान्तः ।
तटिनीतटेषु तत्त्वं ध्यायन्नास्ते यतिः कोऽपि ॥ ३४ ॥

34. நாஸாஞ்சல நிஹிதாக்ஷோ நாமாதிப்யோ நிவர்(த்)தித ஸ்வாந்த: |
தடினீதடேஷு தத்த்வம் த்யாயன்னாஸ்தே யதி: கோ'பி ॥

कः अपि यतिः ஒப்பற்ற ஒரு துறவி **नासाञ्चलनिहिताक्षः** மூக்கு நுனியிலே பார்வையை வைத்தவனுய் **नामादिभ्यः** பெயர் முதலானவற்றினின்றும் **निवर्तितस्वान्तः** தன்னுடைய மனதை மீட்டுக்கொண்டவனுய் **तटिनीतटेषु** நதிக் கரைகளில் **तत्त्वं** உண்மையை **ध्यायन्** தியானித்துக் கொண்டு **आस्ते** இருக்கிறன்.

The ascetic is medidating on the Truth on the banks of the river, with his eyes fixed on the tip of his nose and with his mind withdrawn from names (forms) and such like things.

आशावसनो मौनी नैराश्यालंकृतः शान्तः ।
करतलभिक्षापात्र-स्तरुतलनिलयो मुनिर्जयति ॥ ३५ ॥

35. ஆஶாவஸனோ மௌனீ நைராஶ்யாலம்க்ருத: ஶாந்த: ।
கரதலபிக்ஷாபாத்ர—ஸ்தருதலநிலயோ முனிர்ஜயதி ॥

आशावसनः திக்குகளேயே ஆடையாக வுடையவனும் **मौनी** மனனஞ் செய்பவனும் (ஒன்றும் பேசாமல் இருப் பவனும்) **नैराश्यालंकृतः** பற்றின்மையால் அலங்கரிக்கப் பெற்றவனும் **शान्तः** அமைதியுற்றவனும் **करतलभिक्षापात्रः** உள்ளங்கையைப் பிச்சைவாங்கும் பாத்திரமாகக் கொண்ட வனும் **तरुतलनिलयः** மரத்தடியை குடியிருக்கும் இடமாகக் கொண்டவனன **मुनिः** முனிவன் **जयति** சிறந்து விளங்கு கிறான்.

The sage shines supreme, silent and placid, with the ground under the tree as his resting place and with his palm as the begging bowl, wearing no clothes but only the jewel of non-attachment.

विजननदीकुञ्जगृहे मञ्जुलपुलिनैकमञ्जुतरतल्पे ।
शेते कोऽपि यतीन्द्रः समरससुखबोधवस्तुनिस्तन्द्रः ॥ ३६ ॥

36. விஜனநதீகுஞ்ஜக்ருஹே மஞ்ஜுலபுலிநைகமஞ்ஜுதர
தல்பே ।
ஶேதே கோ'பி யதீந்த்ர : ஸமரஸஸுகபோத வஸ்துநிஸ்
தந்த்ர : ॥

समरससुखबोधवस्तुनिस्तन्द्रः ஒரே ஸச்சிதானந்த மயமான பொருளாகிச் சிரமம் நீங்கியவனன **कः अपि** ஒப்பற்ற ஒரு **यतिवरः** சன்னியாசிச் சிரேஷ்டன் **विजननदीकुञ्जगृहे** ஆள் நடமாட்டமில்லாத ஆற்றங்கரைச் சோலையாகிய

(புதராகிய) வீட்டிலே **मञ्जुलपुलिनैकमञ्जुतरतल्पे** அழகான மணல் என்னும் மிக்க வசீகரமானதும் ஒப்பற்றதுமாகிய படுக்கையிலே **शेते** படுத்துக்கொண்டிருக்கிறான்.

The great recluse who has awakened to the perfect Existence-Knowledge-Bliss rests in his house, which is the deserted bush on the river-bank, on the rare and very comfortable bed of soft sands.

भूतलमृदुतरशय्यः शीतलवातैकचामरः शान्तः ।
राकाहिमकरदीपो राजति यतिराजशेखरः कोऽपि ॥ ३७ ॥

37. பூதலம்ருதுதரஶய்ய : ஶீதலவாதைக சாமர : ஶாந்த: |
ராகாஹிமகரதீபோ ராஜதி யதிராஜஶேகர : கோ'பி ॥

यतिराजशेखरः தவராஜர்களுக்கு முதல்வனான **कः अपि** ஒப்பற்ற ஒருவன் **शीतलवातैकचामरः** குளிர்காற்று என்பதையே ஒப்பற்ற சாமரமாகக் கொண்டும் **राकाहिमकरदीपः** பௌர்ணமிச் சந்திரனைத் தீபமாகக் கொண்டும் **भूतलमृदुतरशय्यः** வெறுந்தரை என்னும் மிக மெதுவான மெத்தையிலே சாய்ந்துகொண்டும் **शान्तः** அமைதியுற்றவனாய் **राजति** விளங்குகிறான்.

The recluse shines a king of kings, resting serenely on the soft bed of bare ground, with the cool breeze as his unique Chamara (royal whisk) and with the full moon as the lamp (of his royal chamber).

विपुलशिलातलफलके विमलसरिद्वारिपरिवृतोदारे ।
मन्दं मलयजपवने वाति प्रस्वपिति कोऽपि यतिराजः ॥ ३८ ॥

38. விபுலஶிலாதலபலகே விமலஸரித்வாரி பரிவ்ருதோதாரே |
மந்தம் மலயஜபவனே வாதி ப்ரஸ்வபிதி கோ'பி யதிராஜ : ॥

विमलसरिद्वारिपरिवृतोदारे நிர்மலமான ஆற்றுநீராலே சூழப் பெற்று அழகாயுள்ள **विपुलशिलातलफलके** அகன்ற பாறையாகிய பலகையிலே **मलयजपवने मन्दं वाति** தென்றலானது மெல்ல வீச **कः अपि** ஒப்பற்ற வொரு **यतिराजः** சிறந்த துறவி **प्रस्वपिति** நன்றாகத் தூங்குகிறான்.

The king of ascetics takes his rest (sleeps) on a broad slab of stone, which is lovely because on every side of it the pure waters of the river are flowing, while the southern breeze (from the Malaya hills) blows gently.

आन्तरमेकं किंचित्सन्ततमनुसंदधन्महामौनी ।
करपुटभिक्षामश्न-न्नटति हि वीथ्यां जडाकृतिः कोऽपि ॥ ३९ ॥

39. ஆந்தரமேகம் கிம்சித்ஸந்ததமனுஸம்ததன் மஹாமௌனீ |
கரபுடபிக்ஷாமஸ்னன்னடதி ஹி வீத்யாம் ஜடாக்ருதி:
கோ'பி ॥

किंचित् ஏதோ ஒன்றை **आन्तरं** மனத்துள்ளே **सन्ततं** இடைவிடாமல் **संदधन्** சிந்தித்துக்கொண்டும் **महामौनी** பெரிய மௌனியாகி **करपुटभिक्षां** உள்ளங்கையிலே (இடப் பெற்ற) பிக்ஷான்னத்தை **अश्नन्** உண்டும் **जडाकृतिः** அறிவில்லாத ஜடப்பொருளைப்போன்ற வடிவமுடையவனாய் **वीथ्यां** தெருவில் **कः अपि** ஒப்பற்ற ஒருவன் **अटति हि** திரிகிறானன்றே ?

Verily, the silent sage, ever engaged in inward meditation, takes the alms placed in his hands as food and wanders along the street like an idiot.

प्रविलाप्य जगदशेषं परिशिष्टाखण्डवस्तुपरतन्त्रः ।
प्राश्नाति कवलमास्ये प्राप्तं प्रारब्धकर्मणा कोऽपि ॥ ४० ॥

40. ப்ரவிலாப்ய ஜகதசேஷம் பரிசிஷ்டாகண்ட வஸ்து பர தந்த்ர : |
ப்ராஸ்னாதி கவலமாஸ்யே ப்ராப்தம் ப்ராரப்தகர்மணா கோ'பி ॥

अशेषं जगत् ஜகத்து முழுவதையும் **प्रविलाप्य** நன்றாகக் கரைத்தொழித்து **परिशिष्टाखण्डवस्तुपरतन्त्रः** மீதியாயுள்ள முழுப்பொருளுக்கு வசப்பட்டவனான **कः अपि** ஒப்பற்ற ஒருவன் **प्राप्तं** கிடைத்த **कवलं** கவளத்தை (பிடிசோற்றை) **प्रारब्धकर्मणा** பிராரப்தகர்மாவால் (பயன் கொடுக்கத் தொடங்கிய வினைப்பயனால்) **आस्ये** வாயிலே இட்டு **प्राश्नाति** உண்கிறான்.

Having dissolved the entire world (by right knowledge) and being under the power of the Perfect Substance that survives such dissolution, he puts into his mouth by force of Prarabdha Karma (past actions which have begun to bear fruit) the handful of food which comes to him.

निन्दति किमपि न योगी नन्दति नैवापरं किमप्यन्तः ।
चन्दनशीतलहृदयः कन्दलितानन्दमन्थरः स्वास्ते ॥ ४१ ॥

41. நிந்ததி கிமபி ந யோகீ நந்ததி நைவாபரம் கிமப்யந்த : |
சந்தனசீதலஹ்ருதய : கந்தலிதானந்தமந்தர : ஸ்வாஸ்தே ॥

योगी யோகியானவன் **किं अपि** ஒன்றையேனும் **न निन्दति** நிந்திப்பது (இகழ்வது) இல்லை **अपरं किं अपि** வேறு ஒன்றையும் **अन्तः** மனத்துள் **न नन्दति एव** புகழ்வதும் இல்லை ; **चन्दनशीतलहृदयः** சந்தனத்தைப்போன்ற குளிர்ந்த

இருதய முடையவனுய் **कन्दलितानन्दमन्थरः** ஆனந்தம் நிறைந்து ததும்புகின்றவனுய் **स्वास्ते** அமர்ந்திருக்கிறன்.

The Yogin does not disregard any one thing; nor does he really regard any other thing. With his heart cool as sandal paste, he remains a mass of Bliss overflowing.

संत्यज्य शास्त्रजालं संव्यवहारं च सर्वतस्त्यक्त्वा ।
आश्रित्यपूर्णपदवी-मास्ते निष्कम्पदीपवद्योगी ॥ ४२ ॥

42. ஸம்த்யஜ்ய ஶாஸ்த்ரஜாலம் ஸம்வ்யவஹாரம் ச ஸர்வதஸ்த்ய
க்த்வா ।
ஆஶ்ரித்ய பூர்ணபதவீ—மாஸ்தே நிஷ்கம்பதீபவத்யோகீ ॥

शास्त्रजालं சாஸ்திரக் குஷியல்களே **संत्यज्य** நன்றுக விட்டுவிட்டு **संव्यवहारं च** கடமையையும் **सर्वतः** முற்றிலும் **त्यक्त्वा** துறந்து **निष्कम्पदीपवत्** அசையாத சுடரையுடைய நந்தாவிளக்கைப் போல **योगी** யோகியானவன் **पूर्णपदवीं** நிறைந்த நிலையிலே **आस्ते** இருக்கிறன்.

The Yogin remains in a state of plenitude, like an unruffled lamp, having cast all injunctions (of the Sastras) aside, and having completely rejected (even) acts of duty.

तृणपङ्कचर्चिताङ्ग-स्तृणमिव विश्वं विलोकयन्योगी ।
विहरति रहसि वनान्ते विजरामरभूम्नि विश्रान्तः ॥ ४३ ॥

43. த்ருணபங்கசர்(ச்)சிதாங்க—ஸ்த்ருணமிவ விஶ்வம் விலோகய
ன் யோகீ ।
விஹரதி ரஹஸி வனாந்தே விஜராமரபூம்னி விஶ்ராந்த: ॥

तृणपङ्कचर्चिताङ्गः புல்லாலும் சேற்றாலும் பூசப்பெற்ற அவயவங்களை யுடையவனும் **विश्वं** உலகமனைத்தையும் **तृणं इव** புல்லைப்போல **विलोकयन्** நோக்கிக்கொண்டு **वनान्ते** காட்டுப்புறத்திலே **विश्रान्तः** சிரமந்தீர்ந்து அமைதியுற்றவனும் **योगी** யோகியானவன் **रहसि** தனிமையிலே **विजरामरभूम्नि** நரையும் மரணமும் இல்லாத பிரதேசத்திலே **विहरति** இன்பமாய் விளையாடுகிறான்.

Taking rest in the outskirts of the forest and regarding the entire universe as a mere blade of grass, the Yogin, his body smeared with mud and straw, enjoys secret Bliss in regions beyond death and old age.

पश्यति किमपि न रूपं न वदति न शृणोति किंचिदपि वचनम् ।
तिष्ठति निरुपमभूमनि निष्ठामवलम्ब्य काष्ठवद्योगी ॥ ४४ ॥

44. பஶ்யதி கிமபி ந ரூபம் ந வததி ந ஶ்ருணோதி கிம்சிதபி வசனம் |
திஷ்டதி நிருபமபூமனி நிஷ்டாமவலம்ப்ய காஷ்டவத்யோகீ ॥

योगी யோகியானவன் **किं अपि रूपं** எந்த ரூபத்தையும் **न पश्यति** காண்பதில்லை ; **न वदति** பேசுவதில்லை ; **किंचित् वचनं अपि** எந்தப் பேச்சையும் **न शृणोति** (காதாலே) கேட்பதில்லை ; **निरुपमभूमनि** (உவமையில்லாத) ஒப்பற்ற செல்வத்திலே (பிரதேசத்திலே) **निष्ठां** நிலைபெற்றிருப்பதை **अवलम्ब्य** கைக்கொண்டு **काष्ठवत्** மரம்போல **तिष्ठति** அசையாதிருக்கிறான்.

The Yogin sees nothing ; nor does he speak ; he does not hear any word that is spoken. He remains steadfast in the incomparable region of bliss, immoveable like a log of wood.

जात्यभिमानविहीनो जन्तुषु सर्वत्र पूर्णतां पश्यन् ।
गूढं चरति यतीन्द्रो मूढवदखिलागमार्थतत्त्वज्ञः ॥ ४५ ॥

45. ஜாத்யாபிமானவிஹீனோ ஜந்துஷு ஸர்வத்ர பூர்ணதாம் பஶ்யன் |
கூடம் சரதி யதீந்ரோ மூடவதகிலாகமார்(த்)ததத்த்வஜ்ஞ: ॥

जात्यभिमानविहीनः தான் (பிறவி) என்ற அபிமானம் ஒன்றும் இல்லாதவனும் **सर्वत्र** எங்கும் **जन्तुषु** (எல்லா) ஜந்துக்களிடத்திலும் **पूर्णतां** நிறைந்த தன்மையை **पश्यन्** காண்பவனும் **अखिलागमतत्त्वज्ञः** எல்லா (ஆகமங்களிலு முள்ள) வேதங்களிலுமுள்ள உண்மையை அறிந்தவனுன **यतीन्द्रः** துறவிகளுட் சிறந்தோன் **मूढवत्** அறிவில்லாதவன் போல **गूढं चरति** மறைந்து திரிகிறுன்.

The great Sannyasin who knows the Truth of all the Vedas wanders like an ignorant fool unnoticed, devoid of all sense of difference, and seeing only perfection everywhere and in all creatures.

उपधाय बाहुमूलं परिधायाकाशमवनिमास्तीर्य ।
प्रस्वपिति विरतिवनितां परिरभ्यानन्दपरवशः कोऽपि ॥ ४६ ॥

46. உபதாய பாஹுமூலம் பரிதாயாகாஶமவனிமாஸ்தீர்ய |
ப்ரஸ்வபிதி விரதிவனிதாம் பரிரப்யானந்தபரவஶ: கோ'பி ॥

कः अपि ஒப்பற்ற ஒருவன் **बाहुमूलं** அடித்தோளை **उपधाय** தலையணையாகக் கொண்டு **आकाशं** வானத்தை **परिधाय** போர்வையாகக் கொண்டு **अवनिं** தரையை **आस्तीर्य** மெத்தையாகக் கொண்டு **विरतिवनितां** விரக்தி என்னும் அழகியை **परिरभ्य** தழுவிக்கொண்டு **आनन्दपरवशः** ஆனந்த பரவசனும் **प्रस्वपिति** நன்முக நித்திரை கொள் கிறுன்.

Embracing (*Virati*) the lady Equanimity and by bliss overpowered, he sleeps with his hand for a pillow, with nothing for coverlet, and with the bare ground for a bedding.

गतभेदवासनाभिः स्वप्रज्ञोदारवारनारीभिः ।
रमते सह यतिराज-स्त्रय्यन्तान्तःपुरे कोऽपि ॥ ४७ ॥

47. கதபேதவாஸனாபிஃ ஸ்வப்ரஜ்ஞோதாரவாரநாரீபிஃ |
ரமதே ஸஹ யதிராஜஸ்—த்ரய்யந்தாந்தஃபுரே கோ'பி ॥

कः अपि यतिराजः ஒப்பற்ற ஒரு சிறந்த சன்னியாசி **त्रय्यन्तान्तःपुरे** உபநிஷத்துக்கள் என்னும் அந்தப் புரத்திலே **गतभेदवासनाभिः** பேதவுணர்ச்சிகள் (ஆடைகள்) நீங்கியவர்களான **स्वप्रज्ञोदारवारनारीभिः सह** தன் பேரறிவு என்னும் அழகிய மாதர்களோடு **रमते** இன்புறுகிறான்.

In the inner apartments of the Vedas, the king of ascetics delights in Self-illumination, as in the company of lovely courtezans whose lingering vestige of difference is all gone.

वैराग्यविपुलमार्गं विज्ञानोद्दामदीपिकोद्दीप्तम् ।
आरुह्य तत्त्वहर्म्यं मुक्त्या सह मोदते यतिराट् ॥ ४८ ॥

48. வைராக்யவிபுலமார்கம் விஜ்ஞானோத்தாம தீபிகோத்தீப்தம் |
ஆருஹ்ய தத்த்வஹர்ம்யம் முக்த்யா ஸஹ மோததே யதிராட் ॥

वैराग्यविपुलमार्गे (வைராக்கியம்) பற்றின்மை என்னும் அகன்ற வழியை யுடையதாய் **विज्ञानोद्दामदीपिकोद्दीप्ते** பேரறிவு (விஞ்ஞானம்) என்னும் மிகச் சிறந்த தீபத்தாலே மிக்க ஒளி பெற்றதாயுமுள்ள **तत्त्वहर्म्ये** உண்மையென்னும்

உப்பரிகைக்கு **आरुह्य** ஏறிச்சென்று **यतिराट्** துறவிகளிற் சிறந்தவன் **मुक्त्या सह** முக்தி (என்னும் பெண்மணி) யோடு **मोदते** இன்புறுகிறான்.

The king among ascetics enjoys the company of Mukti (Liberation) in the lofty mansion of Truth, which is reached by the broad way of Vairagya (Desirelessness) and which is lit by the excellent lamp of supreme Knowledge.

विजनतलोत्पलमालां वनितावैतृष्ण्यकल्पवल्लीं च ।
अपमानामृतगुटिका-मात्मज्ञः कोऽपि गृह्णाति ॥ ४९ ॥

49. விஜனதலோத்பலமாலாம் வனிதாவைத்ருஷ்ண்யகல்பவல்லீம் ச |
அபமானம்ருதகுடிகா—மாத்மஜ்ஞ: கோ'பி க்ருஹ்ணாதி ॥

कः अपि ஒப்பற்ற வொரு **आत्मज्ञः** ஆத்மஞானி **विजनतलोत्पलमालां** ஜன ஸஞ்சாரமில்லாத இடத்தில் (நிரையாக மலர்ந்த) நீலோத்பல மலர்களே ஜபமாலையாகவும் **वनिता - वैतृष्ण्य - कल्पवल्लीं** பெண்பாலாரிடத்தில் ஆசையற்றிருத்தலெக் கற்பகக் கொடியாகவும் **अपमानामृत-गुटिकां** (பிறர் செய்யும் அவமானத்தை) அகங்காரமற்றிருப்பதை அமிர்த குளிகையாகவும் **गृह्णाति** ஏற்றுக் கொள்கிறான்.

The man who knows the Self accepts as a rosary the rows of blue lily flowers in lonely places and as a divine healing herb (kalpavalli) the absence of carnal desire and as magic pills of immortality, the absence of egoism.

न निषेधति दोषधिया गुणबुद्ध्या वा न किंचिदादत्ते ।
आविद्यकमखिलमिति ज्ञात्वोदास्ते मुनिः कोऽपि ॥ ५० ॥

50. ந நிஷேததி தோஷதியா குணபுத்த்யா வா ந கிம்சிதாதத்தே |
ஆவித்யகமகிலமிதி ஜ்ஞாத்வோதாஸ்தே முனி: கோ'பி ॥

कः अपि ஒப்பற்ற ஒரு **मुनिः** முனிவன் **दोषधिया** குற்றம் என்ற எண்ணத்தால் **न निषेधति** (ஒன்றையும்) மறுப்பதில்லை; **गुणबुद्ध्या** நல்லது என்ற எண்ணத்தால் **किंचित्** ஒன்றையும் **न आदत्ते** ஏற்றுக்கொள்வதில்லை; **अखिलं** எல்லாம் **आविद्यकं** அவித்தையால் ஆனது **इति** என்று **ज्ञात्वा** அறிந்து **उदास्ते** (உதாவீனமாக) பற்றற்ற வனாக இருக்கிறான்.

The sage rejects nothing, considering it bad; nor does he accept anything, considering it good. Knowing that everything is the result of *Avidya* (Ignorance), he remains unattached (to anything).

भूतं किमपि न मनुते भावि च किंचिन्नचिन्तयत्यन्तः ।
पश्यति न पुरोवर्त्यपि वस्तुसमस्तार्थसमरसः कोऽपि ॥ ५१ ॥

51. பூதம் கிமபி ந மனுதே பாவி ச கிம்சின்ந சிந்தயத்யந்தः |
பஶ்யதி ந புரோவர்த்யபி வஸ்து ஸமஸ்தார்(த்)தஸமரஸ:
கோ'பி ॥

समस्तार्थसमरसः எல்லாப் பொருள்களிலுமுள்ள ஒரே தன்மையான இன்பமேயாக விளங்கும் **कः अपि** ஒப்பற்ற ஒருவன் **भूतं** சென்றதை **किं अपि** கொஞ்சமும் **न मनुते** சிந்திப்பதில்லை; **भावि** வரப்போவதை **अन्तः** மனதிலே **किंचित्** கொஞ்சமும் **न चिन्तयति** சிந்திப்பதில்லை. **पुरोवर्ति वस्तु अपि** தன் முன்னேயுள்ள வஸ்துவையும் **न पश्यति** காண்பதில்லை.

He does not think at all of what is past, nor does he care in his mind about the future. He does not even see what is in front of him; (for,) he is the One Perfect Bliss in everything.

निगृहीताखिलकरणो निर्मृष्टाशेषविषयेहः ।
तृप्तिमनुत्तमसीमां प्राप्तः पर्यटति कोऽपि यतिवर्यः ॥ ५२ ॥

52. நிக்ருஹீதாகிலகரணோ நிர்ம்ருஷ்டாஶேஷவிஷயேஹ: ।
த்ருப்திமனுத்தமஸீமாம் ப்ராப்த: பர்யடதி கோ'பி யதிவர்ய: ॥

कः अपि ஒப்பற்றவொரு **यतिवर्यः** சன்னியாசிச் சிரேஷ்டன் **निगृहीताखिलकरणः** எல்லாக் கரணங்களையும் (எல்லாச் செய்கைகளையும்) ஒடுக்கிக்கொண்டு **निर्मृष्टाशेष-विषयेहः** இந்திரிய சுகங்களிலுள்ள ஆசைகள் முழுவதை யும் அழித்து **अनुत्तमसीमां** மேல் எல்லையில்லாத **तृप्तिं** ஆனந்தத்தை **प्राप्तः** அடைந்தவனாய் **पर्यटति** எங்கும் திரி கிறான்.

The great ascetic roams about, having subdued all his organs and wiped out all trace of attachment to sense-perceptions, and having attained to illimitable Bliss.

संत्यजति नोपपन्नं नासंपन्नं च वाञ्छति क्वापि ।
स्वस्थः शेते यतिरा-डान्तरमानन्दमनुभवन्नेकः ॥ ५३ ॥

53. ஸ்மத்யஜதி நோபபன்னம் நாஸம்பன்னம் ச வாஞ்சதி க்வாபி ।
ஸ்வஸ்த:ஶேதே யதிரா—டாந்தரமானந்த மனுபவன்னேக: ॥

यतिराट् சன்னியாசிகளுக்கு மன்னன் **उपपन्नं** கிடைத் ததை **न संत्यजति** வேண்டாமென்று மறுப்பதில்லை; **असंपन्नं**

கிடையாததைக் குறித்து **क अपि** எப்பொழுதுமே **न वाञ्छति च** ஆசைப்படுவதும் இல்லை; **स्वस्थः** தன் ஆத்மாவிலேயே நிலைபெற்று நின்று **आन्तरं** (மனத்துள் இருக்கும்) அடிப்படையான **आनन्दं** ஆனந்தத்தை **अनुभवन्** அனுபவித்துக்கொண்டு **एकः** ஒப்பற்றவனாக **शेते** அமைதியுற்றிருக்கிறான்.

The king of Sannyasins rests alone, rooted in Self and enjoying the inner Bliss; he rejects nothing that comes to him and never desires what does not come to him.

कामपि विमलां पदवी-मासाद्यानन्दसंविदुन्निद्राम् ।
आस्ते भिक्षुक एको विहरन्निर्मुक्तबन्धनः स्वैरम् ॥ ५४ ॥

54. காமபி விமலாம் பதவீ—மாஸாத்யானந்த ஸம்விதுன்னித்ராம் |
ஆஸ்தே பிக்ஷுக ஏகோ விஹரன் நிர்முக்தபந்தன: ஸ்வைரம் ॥

एकः भिक्षुकः ஒப்பற்ற வொரு சன்னியாசி **विमलां** மாசற்றதும் **आनन्दसंविदुन्निद्रां** ஸம்வித் ஞானமும் ஆனந்தமும் மலர்ச்சியுடையதுமான **कां अपि** ஒப்பற்றவொரு **पदवीं** நிலைமையை **आसाद्य** அடைந்து **निर्मुक्तबन्धनः** கட்டுக்களினின்றும் விடுதலை பெற்றவனாய் **स्वैरं** தன்னிச்சைப்படி **विहरन्** விளையாடிக்கொண்டு **आस्ते** இருக்கிறான்.

Alone, the mendicant is disporting himself as he pleases, free from (all) bondage, having reached the stage of perfection which is pure, full-blown Knowledge-Bliss.

वस्तुन्यस्तमिताखिल-विश्वविहारे विलीनमनाः ।
राजति परानपेक्षो राजाखिलवीतरागाणाम् ॥ ५५ ॥

55. வஸ்துன்யஸ்தமிதாகில—விஸ்வவிஹாரே விலீனமனா: ।
ராஜதி பரானபேக்ஷோ ராஜாகிலவீதராகாணாம் ॥

अखिलवीतरागानां राजा பற்றற்றவர்கள் எல்லோரினும் சிறந்தவன் **अस्तमिताखिलविश्वविहारे** எல்லா ஜகத்திலு மூள்ள லீலைகள் எல்லாம் நீங்கிப்போன **वस्तुनि** (பரம்) பொருளிலே **विलीनमनाः** ஒடுங்கிய மனதையுடையவனும் **परानपेक्षः** வேறொன்றும் வேண்டாதவனும் (ஸ்வதந்திர னும்) **राजति** விளங்குகிறன்.

The king of all those who are free from Desire shines supreme, depending on none, and with his mind lost in That which is beyond the entire universe of Leela (Vihāra).

आचार्यापाङ्गदृशा समवाप्तापारसंविदाकारः ।
प्रशमितसकलविभेदः परहंसः कश्चिदाभाति ॥ ५६ ॥

56. ஆசார்யாபாங்கத்ருஶா ஸமவாப்தாபாரஸம்விதாகார: ।
ப்ரஶமிதஸகலவிபேத: பரஹம்ஸ: கஶ்சிதாபாதி ॥

कश्चित् ஒப்பற்ற வொருவன் **आचार्यापाङ्गदृशा** குருவின் கடாக்ஷத்தால் **समवाप्तापारसंविदाकारः** எல்லை யற்றதான ஸம்வித் ஞானத்தையே வடிவாகப் பெற் றவனும் **प्रशमितसकलविभेदः** வேறுவேறான பேதங்களை எல்லாம் அறவே ஒழித்தவனும் **परहंसः** பரமஹம்ஸனும் **आभाति** விளங்குகிறன்.

He shines, by the least glance of his teacher (Acharya), a Parama Hamsa (Supreme Swan), having reached the form of endless Knowledge and having lost all sense of difference.

वर्णाश्रमव्यवस्थामुत्तीर्य विधूय विध्यादीन् ।
परिशिष्यते यतीन्द्रः परिपूर्णानन्दबोधमात्रेण ॥ ५७ ॥

57. வர்ணாஸ்ரமவ்யவஸ்தாமுத்தீர்ய விதூய வித்யாதீன் |
பரிஶிஷ்யதே யதீந்த்ர : பரிபூர்ணானந்தபோத மாத்ரேண ॥

यतीन्द्रः சன்னியாசிகளுட் சிறந்தவன் **वर्णाश्रमव्यवस्थां** வர்ணங்கள் ஆச்ரமங்கள் இவற்றின் கட்டுப்பாடுகளை **उत्तीर्य** கடந்து **विध्यादीन्** (சாஸ்திரங்களில்) விதிக்கப்பட்ட விதி முதலியவற்றை **विधूय** உதறியெறிந்து **परिपूर्णानन्दबोधमात्रेण परिशिष्यते** முற்றும் நிறைந்த ஆனந்தமும் அறிவுமேயாக (சிதானந்தம் மட்டுமேயாக) எஞ்சி நிற்கிறான்.

The great ascetic transcends the rules of Varna and Asrama (caste and status), shaking off from him the injunctions and prohibitions (of the Sastras); and he remains merely the perfect Knowledge-Bliss.

क्षयमुपनीय समस्तं कर्म प्रारब्धमुपभुज्य ।
प्रविगलितदेहबन्धः प्राज्ञो ब्रह्मैव केवलं भवति ॥ ५८ ॥

58. க்ஷயமுபனீய ஸமஸ்தம் கர்ம ப்ராரப்த முபபுஜ்ய |
ப்ரவிகலித தேஹபந்த : ப்ராஜ்ஞோ ப்ரஹ்மைவ கேவலம் பவதி ॥

प्राज्ञः பேரறிவாளி **प्रारब्धं** ப்ராப்த வினையை **उपभुज्य** அனுபவித்து **समस्तं** (ஸஞ்சிதம், ஆகாமி, (ப்ராரப்தம் ஆகிய) எல்லா **कर्म** வினைகளையும் **क्षयं उपनीय** அழிந்து போம்படி செய்து **प्रविगलितदेहबन्धः** சரீரத்தோடுள்ள பந்தம் (கட்டு) நழுவி யொழியப் பெற்றவனுய் **केवलं** (தனித்த) சுத்த **ब्रह्म एव** பிரும்மமாகவே **भवति** ஆகிறான்.

Enjoying the fruit of the *Prarabdha Karma* (past deeds which have begun to bear fruit), the wise man

destroys all *Karma* (results of past action) and having slipped off the bonds which bind him to his body, he becomes verily the absolute Brahman.

स्तिमितमनन्तमनाद्यं संततमानन्दबोधघनम् ।
अविकल्पमाद्यमेकं सन्मात्रं विद्यते किमपि ॥ ५९ ॥

59. ஸ்திமிதமனந்தமனத்யம் ஸம்ததமானந்தபோதகனம் |
அவிகல்பமாத்யமேகம் ஸன்மாத்ரம் வித்யதே கிமபி ॥

किं अपि ஒப்பற்ற ஒன்று **स्तिमितं** அமைதியுடைய தாய் **अनाद्यं** ஆதியில்லாததாய் **अनन्तं** முடிவில்லாததாய் **संततं** எப்பொழுதும் **आनन्दबोधघनं** ஒரே ஞானமும் ஆனந்தமுமாயிருப்பதாய் **अविकल्पं** மாறுபாடில்லாததாய் **आद्यं** ஆதிப்பொருளாய் **एकं सन्मात्रं** 'ஸத்' மாத்திரமே யாகிய ஒன்றாய் **विद्यते** விளங்குகின்றது.

With no beginning or end, It shines from the first, the only one and pure Existence, the ever perfect Knowledge-Bliss, immutable and serene.

अक्षरमजरमजातं सूक्ष्मतरापूर्वशुद्धविज्ञानम् ।
प्रगलितसर्वक्लेशं परतत्त्वं वर्तते किमपि ॥ ६० ॥

60. அக்ஷரமஜரமஜாதம் ஸூக்ஷ்மதராபூர்வஸுத்த விஜ்ஞானம் |
ப்ரகலித ஸர்வக்லேஸம் பரதத்த்வம் வர்(த்)ததே கிமபி ॥

किं अपि ஒப்பற்ற ஒரு **परतत्त्वं** சிறந்த உண்மைப் பொருளானது **अक्षरं** அழிவில்லாததாயும் **अजरं** மூப்பு இல்லாததாயும் **अजातं** பிறப்பு இல்லாததாயும் **प्रगलितसर्वक्लेशं** எல்லாத் துன்பங்களும் நழுவி யொழிந்ததாயுமுள்ள **सूक्ष्मतरापूर्वशुद्धविज्ञानं** மிக நுண்ணியதும் கலப்பற்றதும் (அபூர்வமும்) முன்பு என்பது இல்லாத ஆதிப் பொருளு மான பேரறிவாக **वर्तते** இருக்கின்றது.

The one Ultimate Truth exists, unborn, unageing and ever-lasting, ever existent, most subtle and devoid of all distress, as pure and perfect Knowledge.

सुखतरममरमदूरं सारं संसारवारिधेस्तीरम् ।
समरसमभयमपारं तत्किंचन विद्यते तत्त्वम् ॥ ६१ ॥

61. ஸுகதரமமரமதூரம் ஸாரம் ஸம்ஸாரவாரிதேஸ் தீரம் |
ஸமரஸமபயமபாரம் தத்கிம்சன வித்யதே தத்த்வம் ॥

तत् 'தத்' என்னும் **किंचन** ஒரு **तत्त्वं** உண்மையான அது **सुखतरं** பேரின்பமாயும் **अमरं** அழியாததாயும் **अदूरं** தொலைவிலே இல்லாததாயும் (கிட்டியிருப்பதாயும்) **संसार-वारिधेः** ஸம்ஸார ஸாகரத்தின் **तीरं** அக்கரையாயும் **सारं** ஸாரமாயும் (உட்பொருளாயும்) **समरसं** ஒரே (சுவையை) தன்மையையுடையதாயும் **अपारं** எல்லையற்றதாயும் **अभयं** (இரண்டற்றதால்) அச்சமில்லாததாயும் **विद्यते** காணப்படுகின்றது.

That (*Tat*) exists, the one Truth (*Tattva*) which is surpassing Bliss, imperishable and ever near, the Ultimate shore of the ocean of *Samsara*, as the one Quintessence illimitable and unafraid.

अरसमगन्धमरूपं विरजस्कमसत्त्वमतमस्कम् ।
निरुपमनिर्भयतत्त्वं तत्किमपि द्योतते नित्यम् ॥ ६२ ॥

62. அரஸமகந்தமரூபம் விரஜஸ்கமஸத்த்வமதமஸ்கம் |
நிருபம நிர்பர தத்த்வம் தத்கிமபி த்யோததே நித்யம் ॥

अरसं சுவை (என்னும் குணம்) இல்லாததும் **अगन्धं** மணம் இல்லாததும் **अरूपं** உருவமில்லாததும் **विरजस्कं** ரஜோகுணம் (மாசு) இல்லாததும் **असत्त्वं** ஸத்வகுண

மில்லாததும் **अतमस्कं** தமோகுண மில்லாததுமான **तत्** 'தத்' என்னும் **निरुपमनिर्भयतत्त्वं** (வேறு பொருள் ஒன்றும் இல்லாததால்) உவமையற்றதும் அச்சமற்றதுமான உண்மைப்பொருள் **किं अपि** (ஏதோ) ஒப்பற்ற ஒன்று **नित्यं** என்றுமுள்ளதாய் **द्योतते** விளங்குகின்றது.

The eternal That (*Tat*) shines, unpercieved by the eye, the nose and the tongue, free from the qualities (*gunas*) of *Sattva*, *Rajas* and *Tamas*, the one Truth, peerless and unafraid.

इति गुरुकरुणापाङ्गादार्याभिर्द्व्यधिकषष्टिसंख्याभिः ।
निरवद्याभिरवोचं निगमशिरस्तन्त्रसारभूतार्थम् ॥

இதி குருகருணாபாங்கா-தார்யாபிர்த்வ்யதிக ஷஷ்டி ஸம்க்யாபிः |
நிரவத்யாபிரவோசம் நிகம ஶிரஸ்தந்த்ர ஸாரபூதார்(த்)தம் ॥

इति இவ்வாறு **गुरुकरुणापाङ्गात्** குருவின் கருணை நிரம்பிய கடாக்ஷத்தாலே **द्व्यधिकषष्टिसंख्याभिः** அறுபத்திரண்டு **निरवद्याभिः** குற்றமற்ற **आर्याभिः** 'ஆர்யா' விருத்தத்திலமைந்த சுலோகங்களால் (சிறந்த சொற்களால்) **निगम-शिरस्तन्त्रसारभूतार्थं** உபநிஷத்துத் தந்திரங்களின் (உபாஸனை முறைகளின்) ஸாரமான பொருளைப் பற்றி **अवोचं** பேசினேன்.

Thus, inspired by the gracious glance of my (*guru*) teacher, I have spoken of the inner meaning of the (Tantras) Upasanas of the Upanishads in sixty-two flawless Arya verses.

गदितमिममात्मविद्याविलासमनुवारं स्मरन्विबुधः ।
परिणतपरमात्मविद्यः प्रपद्यते सपदि परमार्थम् ॥

கதித மிமமாத்ம வித்யா விலாஸ மனுவாரம் ஸ்மரன்விபுதः |
பரிணத பரமாத்மவித்ய : ப்ரபத்யதே ஸபதி பரமார்(த்)தம் ॥

गदितं (இப்படி) சொல்லப்பட்ட **आत्मविद्याविलासं** (ஆத்மாவாகிய அறிவின் அழகையுடையதான) "ஆத்ம வித்யா விலாஸ:" என்னும் **इमं** இதை **अनुवारं** ஒவ்வொரு நாளும் **स्मरन्** ஸ்மரித்து **विबुधः** அறிவாளி **परिणतपरमार्थविद्यः** சிறந்த ஆத்ம ஞானத்தில் முதிர்ந்தவனாகி **सपदि** உடனேயே **परमार्थं** பரம்பொருளை **प्रपद्यते** அடைகிறான்.

The wise man, contemplating daily (on this work *Atma-vidya-vilasa*) on the splendour of *Atma-Vidya* described here, will grow ripe in the wisdom of the supreme Soul and reach at once the Ultimate Truth.

परमशिवेन्द्रश्रीगुरुशिष्येणेत्थं सदाशिवेन्द्रेण ।
रचितेयमात्मविद्याविलासनाम्नी कृतिःपूर्णा ॥

பரமஸிவேந்த்ர ஸ்ரீ குரு ஸிஷ்யேணேத்தம் ஸதாஸிவேந்த்ரேண |
ரசிதேயமாத்ம வித்யா விலாஸ நாம்னீ க்ருதிः பூர்ணா ॥

इत्थं இவ்வாறு **परमशिवेन्द्रश्रीगुरुशिष्येण** ஸ்ரீ குரு பரமசிவேந்த்ரர்களின் சிஷ்யர்களான **सदाशिवेन्द्रेण** ஸதாசிவேந்த்ரர்களால் **रचिता** செய்யப்பெற்ற **आत्मविद्याविलासनाम्नी** 'ஆத்ம வித்யா விலாஸ:' என்னும் பெயரையுடைய **इयं कृतिः** இந்தச் செய்யுள் **पूर्णा** முற்றுப்பெற்றது.

Thus is completed this work named '*Atma-Vidya-Vilasa*', composed by Sadasivendra, the disciple of the gracious *guru* (teacher) Parama Sivendra.

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य-
श्रीपरमशिवेन्द्रसरस्वती-पादाब्जसेवापरायण-
श्रीसदाशिवेन्द्रसरस्वत्या
विरचितः आत्मविद्याविलासः समाप्तः ॥

இதி ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீ பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ பாதாப்ஜஸேவாபராயண்
ஸ்ரீ ஸதாசிவேந்த்ர ஸரஸ்வத்யா
விரசித: ஆத்ம வித்யா விலாஸ: ஸமாப்த:.

இவ்வாறு ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ பரமசிவேந்திர
ஸரஸ்வதீ என்பவர்களின் திருவடித் தாமரைகளிலே
ஸேவை செய்வதையே முக்கியமாகக் கொண்ட
ஸ்ரீ ஸதாசிவேந்திர ஸரஸ்வதீ என்பவர்களால்
இயற்றப்பெற்ற ஆத்ம வித்யா விலாஸ:
என்னும் நூல் முற்றிற்று.



கோவி ஜார் ஆதீனம்
6370
R65 (மறி)
கோவி ஜார்-638 307